

வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதிக்குட்பட்ட வள்ளிமலை, மேல் பாடி, கொல்லபள்ளி, விண்ணம்பள்ளி, வெப்பாலை, ஸ்ரீபாத நல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 337 பயனாளிகளுக்கு ரூ.9.15கோடி மதிப்பில் வீட்டுமனைபட்டா, மற்றும் நலத்திட்ட உதவிகளை நீர்வளம் – சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கருணாகரன், பொன்னை ரவி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கலைவாணி, ஒன்றிய குழு உறுப்பினர் சுஜாதா, வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கார்கில் வெற்றி!

# வீரர்களின் தியாகம் நம் நினைவை விட்டு நீங்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 27–

“கார்கில் வெற்றி வீரர்களின் தீரமும் தியாகமும் என்றும் நம் நினைவை விட்டு நீங்காது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கார்கில் வெற்றி நாளையொட்டி தமது சமூகவலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

கார்கில் வெற்றி நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**கார்கில் வெற்றி நாளில், நமது தாய்மண்ணை ஈடு இணையற்ற மனவுறுதியுடன் காத்து, உயிர்நீத்த துணிச்சல்மிகு இராணுவ வீரர்களுக்கு என் வீர வணக்கங்கள்!**

**அவர்களது தீரமும் தியாகமும் என்றும் நம் நினைவை விட்டு நீங்காது.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### கடலூர் மாவட்டம் திருமுட்டம் ஏரியில் மூழ்கி

# உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 27–**

**கடலூர் மாவட்டம், திருமுட்டம் ஏரியில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு:–

கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் வட்டம், ஸ்ரீ வக்காரமாரி கிராமம், மேட்டுத் தெருவைச் சேர்ந்த செல்வன். அப்துல் ஆசிம் (வயது 12) த/பெ.நிசாருல்லா என்ற சிறுவன் நேற்று (26.07.2025) காலை சுமார் 10.30 மணியளவில் ஸ்ரீ வக்காரமாரி குன்னத்தேரி என்றஏரியில்குளிக்கச்சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### ஆவடியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் தாட்கோ சார்பில்

# தூய்மை பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.13.71 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவி!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், ஜூலை 27–

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில், நேற்று முன்தினம் (25.07.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் தாட்கோ வாயிலாக தூய்மை பணியாளர்கள் நல வாரியம் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தூய்மை பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.13.71 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தூய்மை பணியாளர்கள் நல வாரியம் சார்பில் 3 நபர்களுக்கு ஸ்மார்ட் அடையாள அட்டைகளையும், 7 நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகளையும், தமிழ்நாடு (வுNஊறுயு) சொசைட்டி ஆவடி மாநகராட்சியில் 20 நபர்களுக்கு ரூ.10,00,000ஃ- கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் தூய்மை பணியாளர்கள் நல வாரியம் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளாக திருமண உதவித் தொகை 20 நபர்களுக்கு ரூ.82,000/–, மகப்பேறு உதவித்தொகை 35 நபர்களுக்கு ரூ.2,10,000/–, கல்வி உதவித் தொகை 14 நபர்களுக்கு ரூ.34,000/– இயற்கை மரணம் ஈமசடங்கு உதவித்தொகை 1 நபர்க்கு ரூ.25.000/–, கண் கண்ணாடி வாங்குவதற்கான உதவித்தொகை 40 பயனாளிகளுக்கு ரூ.20,000/– ஆக மொத்தம் ரூ.13,71,000/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா. சரண்யா, மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ், பகுதி செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், தூய்மை பணியாளர் நல வாரிய உறுப்பினர் தி.அரிஷ் குமார், தாட்கோ மாவட்ட மேலாளர் ர.சரண்யா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நாளை (28–ஆம் தேதி) பல்லாவரத்தில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (28.7.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் பல்லாவரம், 200 அடி ரேடியல் சாலையில் அமைந்துள்ள சுரபி மகால் திருமண மண்டபத்தில், மாவட்டக்கழக அவைத்தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர – பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் – மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:– காலை உணவு திட்ட விரிவாக்கம் தொடங்கிட – மாவட்ட அரசு மருத்துவமனை திறந்திட – வீட்டுமனை பட்டாக்கள் வழங்கிட கழகத் தலைவர் – முதல்வர் அவர்கள் வருகிற 5.8.2025 அன்று நம்முடைய மாவட்டத்திற்கு வருகை.

கழக வளர்ச்சி பணி.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### லட்சுமி பங்காரு அடிகளார் தலைமை! பனையூர் பாபு முன்னிலையில்

# மேல்மருவத்தூர் ஊராட்சியில் நியாய விலைக் கட்டிடம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்! ஏழுமலை பங்கேற்பு!

மதுராந்தகம், ஜூலை 27 –

செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் ஒன்றியம், மேல்மருவத்தூர் ஊராட்சியில் செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.10.11 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் தலைமை தாங்கினார்.

செய்யூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு (.வி.சி.க.), ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அகத்தியன் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார்.

முன்னதாக சோத்துப்பாக்கம் ஊராட்சியில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை அமைச்சர் தா.மோ. அன்பரசன், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்து துறை ரீதியான அரங்குளை பார்வையிட்டுகோரிக்கை மனுக்களை பெற்று விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் மதுராந்தகம் ஆர்டிஓ ரம்யா, கூட்டுறவு இணைப்பதிவாளர் நந்தகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடாசலம், பேரூர் செயலாளர் மோகன்தாஸ், கவுன்சிலர்கள் ஜனனி, நாகப்பன், சோத்துப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஸ்ரீதர், நிர்மல் குமார், குமுதா

மதுரை, விசிக மாவட்ட னாள் மாவட்ட செயலாளர் மானோர் கலந்து கொண்ட
செயலாளர் தமிழினி, முன் ஆதவன் உள்ளிட்ட ஏராள னர்.

### சென்னை வடக்கு மாவட்டம்

# இராயபுரம் கிழக்கு, ஆர்.கே.நகர். மேற்கு, பெரம்பூர் தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள மாவட்ட பிரதிநிதி பொறுப்புகளுக்கான தேர்தல் : தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு!

“சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதியில் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கலைச்செல்வன் 49வது வட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும் – ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் , மாவட்டபிரதிநிதியாகதேர்ந்தெடுக்கப்பட்டவேதாச்சலம்மறைவெய்தியதாலும், இரவிக்குமார் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டதாலும் – பெரம்பூர் தெற்கு பகுதியில் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.என்.திருமலை மறைவெய்தியதாலும், சென்னை வடக்கு மாவட்டத்தில் நான்கு மாவட்ட பிரதிநிதிகள் பொறுப்பு நிரப்பட வேண்டியிருப்பதால், சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதியில் ஒன்று – ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இரண்டு – பெரம்பூர் தெற்கு பகுதியில் ஒன்று என மொத்தம் **நான்கு மாவட்ட பிரதிநிதி பொறுப்புகளுக்கு** தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2025 ஜூலை 16 (புதன் கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதியில் ஒரு மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு எல்.சீனிவாசன் மட்டுமே – ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் இரண்டு மாவட்ட பிரதிநிதி பொறுப்புகளுக்கு கே.கோதண்டன், ஆ.தனசேகரன் ஆகிய இருவர் மட்டுமே – பெரம்பூர் தெற்கு பகுதியில் ஒரு மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு நா.பூபாலன் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை வடக்கு மாவட்டம்,**

**இராயபுரம் கிழக்கு பகுதி, மாவட்ட பிரதிநிதியாக**

**திரு. எல். சீனிவாசன்,** 124/113/11, சஞ்சீவிராயன் கோவில் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021 அவர்களும்;

**ஆர்.கே.நகர் மேற்கு பகுதி, மாவட்ட பிரதிநிதிகளாக**

**திரு. கே. கோதண்டன்,** 8, சின்னசாமி தெரு, அண்ணா நகர், கொருக்குபேட்டை, சென்னை – 600 021 அவர்களும்;

**திரு. ஆ. தனசேகரன்,** 39, 2வது தெரு, திருவள்ளுவர் நகர், கொருக்குபேட்டை,சென்னை–60021 அவர்களும்;

**பெரம்பூர் தெற்கு பகுதி, மாவட்ட பிரதிநிதியாக**

**திரு. நா. பூபாலன்,** 19/9, மறைமலை அடிகள் தெரு, டீச்சர்ஸ் காலனி, எருக்கஞ்சேரி, சென்னை – 600 118 அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 26.07.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி சட்டமன்ற தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் வரவேற்பில் பொன்னேரியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு பயிற்சி முகாமை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இதில் தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின், சமூக வலைதள தன்னார்வலர் விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் பாக இளைஞர்களுக்குபணியாற்றுவது குறித்து பயிற்சி அளித்தார்கள் இந்நிகழ்ச்சியில் இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக், நிர்வாகிகள் மு.பகலவன், கே.வி.ஜி. உமாகேஸ்வரி, மு.கதிரவன் பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், பரிமளம் விஸ்வநாதன், பா.செ.குணசேகரன், வெங்கடாஜலபதி, ஜி. ரவிக்குமார், ஆ.ராஜா, நா செல்வ சேகரன், மு.முரளிதரன், ஞாயிறு ஆனந்தகுமார், ஜெகதீசன், ஆர்.டி.இ.உதயசூரியன், எம்.முத்து, க.சு. தமிழ் உதயன், ஜெ. மோகன் பாபு, டி.சங்கர், கதிரவன், யுவராஜ், பிரதாப், மா. தீபன், உள்பட பலர் உள்ளனர்.



கழக சட்ட துறையின் சார்பில் வழக்கறிஞர் அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் DLC சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் CLC ஆகியோர்களுக்கு பயிற்சி பாசறை சட்ட துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பினை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து கழக சட்ட துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலை உரையற்றினார். தொடர்ந்து மாநில திட்ட குழு துணை தலைவர் டாக்டர் ஜெயரஞ்சன், செயற்கை நுண்ணறிவு பற்றி தனசேகர் சேசாத்ரி ஆகியோர் உரை ஆற்றினார்கள். தொடர்ந்து கழக சட்ட துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ, வழக்கறிஞர் அணி நிர்வாகிகளுக்கு 2026 ஆண்டு நடைபெற இருக்கின்ற பொது தேதலில் கழக வழக்கறிஞர்கள் எவ்வாறு செயல் பட வேண்டும் என்று விரிவாக உரை ஆற்றினார். இந்த பயிற்சி வகுப்பானது காலை 10 மணி முதல் மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. இந்த பயிற்சி பாசறையில் 234 சட்டமன்ற தொகுதியின் ஒருங்கிணைப்பாளர்கள் 76 கழக மாவட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் சட்ட துறையின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் சட்ட துறையின் இணை செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.எம்.தண்டபாணி, சு.ராதாகிருஷ்ணன், பி.ஆர்.அருள்மொழி, இரா.தாமரைச்செல்வன், ஜெ.பச்சையப்பன், சூர்யா வெற்றிகொண்டான், சட்ட துறையின் துணை செயலாளர்கள் கே.சந்துரு, பெ.ரகு, டாக்டர் சந்திரபோஸ், என்.மருதுகணேஷ், எஸ். ராஜா முகம்மது, தலைமை கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ. சரவணன், வீ.கவிகணேசன், கே.மறைமலை, சுவை சுரேஷ், எஸ்.எஸ். மனோஜ், தினேஷ், எம்.எஸ்.பி.வீரமணி, மீஞ்சூர். சுரேஷ், கலாநிதி ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.